**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்**
**(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகர்கோவில்)**

**முன்னிலை: திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ., எல்.எல்.எம்.,**
**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்/**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**நாகர்கோவில்.**

2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 04-ம் நாள் வியாழக்கிழமை

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை மனு எண். 106/2022

CNR.No.TNKK01-001775-2022

1. சுந்தர்ராஜ்,
   த.பெ. பரணி

2. ராஜம்,
   க.பெ. சுந்தர்ராஜ் ... மனுதாரர்கள்

// எதிர் //

1. ஜெகன்,
   த.பெ.பொன்னுபிள்ளை

2. பாகுலியன் நாயர்,
   த.பெ.கிருஷ்ணன் ஐயர்

3. கிறிஸ்டோபர்,
   த.பெ.பால்

4. பொன்னுபிள்ளை,
   த.பெ. செல்லையன்

5. நிர்வாக பங்குதாரர்,
   அலெக்ஸ் பால்,
   K.K.கிரானைட்ஸ், கஞ்சிகுழி

6. ஆல்பர்ட் ஜாண்,
   த.பெ.தேவசகாயம்.

7. கிளை மேலாளர்,
இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

8. கிளை மேலாளர்,
நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
நாகர்கோவில். ... எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 01.06.2026-ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.தேவதாஸ் அவர்கள் ஆஜராகியும், 1,4-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.M.மதன்லால் அவர்கள் ஆஜராகியும், 2,5-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஜிம் அவர்கள் ஆஜராகியும், 3,6-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஆன்றோ கிளிட்டஸ் ராஜ் அவர்கள் ஆஜராகியும், 7-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.அனீட்டர் ஆல்வின் அவர்கள் ஆஜராகியும், 8-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.பென்சிகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், சாட்சிய மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்

## <u>உத்தரவு</u>

மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ.60,00,000/- இழப்பீட்டு தொகையாக கிடைக்கும்படியும், அதற்கு இம்மனு தாக்கல் செய்த தேதி முதல் பணம் செலுத்தும் தேதி வரை சட்டப்படியான வட்டியுடன் சேர்த்து செலுத்த உத்தரவிட கோரியும், மனு செலவு தொகையை மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் அளிக்க உத்தரவிட

கோரியும், மனுதாரர் இம்மனுவை Section 166(C) of the Motor Vehicles Act (Central Act 59 of 1988) and Rule 24 of Tamil Nadu Motor Accidents Claims Tribunal Rules 1989 (Amended Act 54 of 1994)–ன் படி தாக்கல் செய்துள்ளார்கள்.

**AWARD**

| | | |
|---|---|---|
| 1. இறந்தவரின் பெயர் | – | சுபின் |
| 2. வயது | – | 29 |
| 3. வேலை | – | Electrician |
| 4. மாத வருமானம் | – | ரூ.33,000/– |
| 5. விபத்து தேதி | – | 23.12.2020 |
| 6. இழப்பீட்டு தொகை | – | ரூ.60,00,000/– |

**2) மனுவின் சுருக்கம் .:–**

(i) கடந்த 23.12.2020 அன்று காலை சுமார் 11.30 மணியளவில், 5–வது எதிர்மனுதாருக்கு சொந்தமான TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை 2–வது எதிர்மனுதாரர் கஞ்சிகுழியிலிருந்து இடுக்கன்துறைக்கு கிரானைட் கற்களை ஏற்றுவதற்காக தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் ஓட்டி சென்று சுருளக்கோடு சந்திப்பை அடைந்தபோது, 4–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ பேஷன் பிளஸ் இருசக்கர வாகனத்தில் இறந்து போன சுபின் என்பவரை பின் இருக்கையில் அமர வைத்து 1–வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்துள்ளார். மேற்படி வாகனத்தை பார்த்த 2–வது எதிர்மனுதாரர் தனது வாகனமான Tipper லாரியை வலதுபுறமாகத் திருப்பி சென்று, 3–வது

எதிர்மனுதாரரால் சாலையின் வலதுபுறத்தில் நிறுத்தப்பட்டிருந்த 6–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 74 M 7274 என்ற பதிவு எண் கொண்ட Maxi Truck வாகனத்தின் மீது மோதினார். அந்த சமயத்தில் பொன்னமணியிலிருந்து சுருளக்கோடு நோக்கி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி 1–வது எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம், 5–வது எதிர்மனுதாரரின் டிப்பர் லாரி மீது மோதி, 1–வது எதிர்மனுதாரரும், இறந்து போன நபரும் வாகனத்திலிருந்து கீழே விழுந்ததில் 1–வது எதிர்மனுதாரருக்கும், இறந்து போன நபருக்கும் உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டது. இறந்து போன சுபினுக்கு மிகக் கொடுங்காயங்கள் ஏற்பட்டது. இதனை மெய்ப்பிக்கும் வகையில், பிரேதப் பரிசோதனை அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. உடனடியாக இறந்து போன சுபினையும், 1–வது எதிர்மனுதாரரையும் பத்மநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மனுதாரரின் மகன் சுபின் சிகிச்சை பலனின்றி இறந்து போயுள்ளார்.

(ii) இறந்து போன சுபின் அழகியமண்டபத்தில் அமைந்துள்ள Victory Institute of Engineering கல்வி நிறுவனத்தில் Electrical பாடப்பிரிவில் Diploma படித்து 2011-–ம் ஆண்டில் தேர்ச்சி பெற்றார். 2011–ம் ஆண்டில் தனது படிப்பை நிறைவு செய்த பிறகு, 2019 வருடம் ஜூன் மாதம் வரை, இறந்து போன சுபின் Electrician ஆக பணியாற்றினார். அதன் மூலம் கிடைத்த தினக்கூலி வருவாயைக் கொண்டு தனது பெற்றோரைப் பராமரித்து வந்தார். மனுதாரர்கள் இருவரும் முதியவர்கள் ஆவர். முதுமையின் காரணமாக, கடந்த பல ஆண்டுகளாகவே அவர்கள் பல்வேறு உடல்நலக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இறந்து போன சுபின் உயிருடன் இருந்த காலத்தில், தனது பெற்றோரைப் பராமரிப்பதிலும், அவர்களது தேவைகளைக் கவனித்துக்கொள்வதிலும் கணிசமான தொகையைச் செலவிட்டு வந்தார்.

(iii) மனுதாரர்களின் மகன், விபத்து நிகழ்ந்த சமயத்தில் திருமணமாகாத நிலையில் (Bachelor) இருந்தார். மனுதாரர்கள் தங்கள் மகனுக்கு ஒரு துணையைத் தேடிப்பிடித்து, அவருக்குத் திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். இத்தகைய சூழலில், அந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்ததால், திட்டமிடப்பட்டிருந்த திருமணம் நின்றுபோனது.

(iv) விபத்து நடந்த சமயத்தில், மனுதாரர்களின் மகன் கன்னியாகுமரி மாவட்டம், பொன்மனையில் அமைந்துள்ள 'AJ Construction' நிறுவனத்தில் மின்பணியாளராகப் பணியாற்றி நாளொன்றுக்கு ரூ.1,100/- என்ற அளவில் தினக்கூலி வருவாயைப் பெற்று வந்தார். அந்த விபத்து மட்டும் நிகழ்ந்திராமல் இருந்திருந்தால், மனுதாரர்களின் மகன் சுபின் சுமார் 90 ஆண்டுகள் வரை உயிருடன் வாழ்ந்திருப்பார். மனுதாரர்களின் மகன் சுபின் உயிருடன் இருந்த காலத்தில், மனுதாரர்களுக்கு உணவு, உடை மற்றும் மருந்துகளை வழங்கிப் பராமரித்ததுடன், அவர்கள் மீது மிகுந்த அன்பையும் பொழிந்து அவர்களைக் கவனித்துக்கொண்டார். மனுதாரர்கள் தங்கள் அனைத்துத் தேவைகளுக்கும் இறந்து போன நபரையே முழுமையாகச் சார்ந்திருந்தனர்.

(v) மேற்படி விபத்தானது 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் அஜாக்கிரதை மற்றும் கவனகுறைவால் மட்டுமே ஏற்பட்டது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மேற்படி வாகனங்களை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆவார்கள். 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மேற்படி வாகனங்களின் உரிமையாளர் ஆவார்கள். 7–ம் எதிர்மனுதாரர் 4–வது எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் ஆவார். 8–ம் எதிர்மனுதாரர் 5–வது எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் ஆவார். எனவே, 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, சேர்ந்தோ மனுதாரரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே, ஷை விபத்து இழப்பிற்காக ரூ.60,00,000/– இழப்பீடு கோரி மனுதாரர்கள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–

(i) இந்த மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிக அதிகமானது. மனுவில் கூறப்பட்டுள்ள இறந்து போன நபரின் வேலை குறித்த தகவல் பொய்யானது. அதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. இறந்து போன நபரின் வயது, தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து நடந்த விதம் சரியானது அல்ல. கடந்த 23.12.2020 அன்று, 4–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் 1–வது எதிர்மனுதாரர் இறந்து போன

நபரை பின்னால் அமர வைத்து, பொன்மனையிலிருந்து சித்திரகோடு வரை அனைத்து போக்குவரத்து விதிகளையும் பின்பற்றி மெதுவாக ஓட்டி வந்து, காலை 11.15 மணிக்கு சுருளக்கோடு சந்திப்பு அருகே சென்றடைந்தபோது, TN 74 M 7274 என்ற பதிவு எண் கொண்ட மஹிந்திரா மேக்ஸி டிரக் வாகனம் சித்திரக்கோடு – தடிக்கரங்கணம் செல்லும் சாலையில் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றாமல் நிறுத்தப்பட்டிருந்தது. TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை 2–வது எதிர்மனுதாரர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹார்ன் அடிக்காமலும் ஓட்டி வந்து எதிர் திசையில் 1–வது எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதியதில் 1–ம் எதிர்மனுதாரரும், இறந்துபோன நபரும் கீழே விழுந்து காயமடைந்தனர். 1–ம் எதிர்மனுதாரர் குலசேகரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்போது, குலசேகரம் காவல்துறையினர் 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து புகாரைப் பெற்ற போதும், மேற்படி புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யவில்லை. காவல்துறையினர் 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்து ஒரு பொய்யான புகாரைப் பெற்று, 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக குற்ற எண் 557/2020–ல் வழக்குப் பதிவு செய்தனர். 1–ம் எதிர்மனுதாரர் இது தொடர்பாக 31.12.2023 அன்று காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினார். மேலும் பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2–ல் பிரிவு 156(3)–ன் கீழ் ஒரு மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவானது Crl.MP எண்.1054/2021 என எண்ணிடப்பட்டு, விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு குலசேகரம்

காவல்துறையினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் இந்நாள்வரை மேற்படி காவல்துறையினர் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை. மேற்படி விபத்தானது 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெறவில்லை. 1–வது எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது. 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் 4–ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி வாகனம் 7–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களால் கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை மிக அதிகமானது. எனவே மனுதாரர்களின் மனுவினை 1 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4) <u>2 மற்றும் 5–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–

(i) இந்த மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மனு பத்தி 23–இல் சொல்லியுள்ளவாறு 23.12.2020 அன்று காலை சுமார் 11.30 மணியளவில், 6–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 74 M 7274 என்ற பதிவு எண் கொண்ட மேக்ஸி டிரக் வாகனத்தை 3–ம் எதிர்மனுதாரர் சுருளக்கோடு சந்திப்பின் வலதுபுறத்தில் நிறுத்தியிருந்தார் எனவும், இறந்தவர் பின்னால் அமர்ந்து பயணித்த TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ பேஷன் மோட்டார் சைக்கிளைக் கண்டதும், 5–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை ஓட்டி வந்த 2–ம் எதிர்மனுதாரர் நிறுத்தப்பட்டிருந்த TN 74 M 7274 என்ற பதிவு எண்

கொண்ட மேக்ஸி டிரக் மீது மோதினார் எனவும், அதனால் இறந்து போன நபர் பின்னால் அமர்ந்து பயணித்த TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ பேஷன் மோட்டார் சைக்கிள் TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி மீது மோதியது எனவும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. உண்மையில், TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி, சுருளக்கோடு சந்திப்பு அருகே, அதன் ஓட்டுநரால் போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்து, மெதுவாகவும் கவனமாகவும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட பேஷன் மோட்டார் சைக்கிளை எதிர் திசையிலிருந்து, அதன் ஓட்டுநர் கவனகுறைவாகவும் அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளைக் கடைப்பிடிக்காமலும் ஓட்டி வந்து கிழமேல் ரோட்டில் தென்புறமாக மாறி சென்றதால் நேருக்கு நேர் மோதலைத் தவிர்க்கும் பொருட்டு, மேற்படி லாரியின் ஓட்டுநரான 2–ம் எதிர்மனுதாரர் சாலையோரம் நின்றிருந்த TN 74 M 7274 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மீது மோதியதைத் தொடர்ந்து, TN 75 A 0292 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் மேற்படி டிப்பர் லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. TN 75 A 0262 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ பேஷன் மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக, குலசேகரம் காவல் நிலையத்தில் குற்ற எண் 557/2020–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

(ii) மனுவில், இறந்தவர் கன்னியாகுமரி, பொன்மனையில் உள்ள A.J.கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தில் மின்சாரப் பணியாளராகப் பணிபுரிந்து, ஒரு நாளைக்கு ரூ.1,100/– சம்பாதித்து, அந்த வருமானம் முழுவதையும் தனது வயதான பெற்றோருக்கு வழங்கினார் என்றும், அந்த வயதான பெற்றோர் இறந்தவரை மட்டுமே சார்ந்திருந்தனர் என்றும் உள்ள கூற்றுகள் அனைத்தும் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்.

(iii) தொடக்கத்தில், 5–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிப்பர் லாரியானது 2014–ம் ஆண்டில் வாங்கப்பட்டு, கேரள மாநிலம், மூவாற்றுப்புழா வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் (RTO), கே.கே. கிரானைட்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரரான அலெக்ஸ் பால் என்பவரின் பெயரில் KL 17 L 3744 என்ற பதிவு எண்ணுடன் பதிவு செய்யப்பட்டது. 5–வது எதிர்மனுதாரரின் வணிக நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் அதிகமாக இருந்ததால் வசதிக்காக 5–வது எதிர்மனுாரர் தனது வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் அதிகார வரம்பை கேரள மாநிலம், மூவாற்றுப்புழா வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு, மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு மாற்றிக்கொள்ளத் கோரியதின் பேரில், கேரள மாநிலம், மூவாற்றுப்புழா வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (RTO) 01.10.2020 அன்று தேவையான தடையில்லாச் சான்றிதழை வழங்கியது. மேலும், மேற்படி லாரி தமிழ்நாடு, மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் TN 75 AQ 6555 என்ற பதிவு எண்ணுடன் வாகனமாகப் பதிவு

செய்யப்பட்டு, 21.10.2020 முதல் 20.10.2025 வரை செல்லுபடியாகும் அனுமதி வழங்கப்பட்டது. TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி, 8–வது எதிர்மனுதாரரிடம் செல்லுபடியாகும் வகையில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. காப்பீட்டுப் பத்திர எண். 76160031190100031026, அதன் செல்லுபடி காலம் 16.03.2020 முதல் 15.03.2021 வரை ஆகும். விபத்து நடைபெறுவதற்கு முன்னரே, அதாவது 21.10.2020 அன்றே, TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் வாகனத்தின் பதிவு மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த பிறகும், வாகனத்தின் பதிவு எண் தொடர்பான அவசியமான மாற்றங்களைப் பதிவேட்டில் செய்வதற்கு 8–வது எதிர்மனுதாரர் முற்றிலும் தவறிவிட்டார். மேலும் மேற்படி TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை ஓட்டுவதற்கு 2–வது எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது. மேலும் மேற்படி லாரியானது 8–வது எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் செல்லுபடி காலம் 16.03.2020 முதல் 15.03.2021 வரை ஆகும். இழப்பீடு கொடுக்க வேண்டும் என்கின்ற பட்சத்தில் 8–ம் எதிர்மனுதாரர்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். எனவே மனுதாரர்களின் மனுவினை 2 மற்றும் 5–ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

**5) <u>3 மற்றும் 6-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

(i) மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் கூற்றுகளும் குற்றச்சாட்டுகளும் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவற்றைத் தவிர மற்றவை மறுக்கப்படுகின்றன. இந்த மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் கோரியுள்ள ரூ.60,00,000/- இழப்பீட்டுத் தொகை மிகவும் அதிகமானது. மனுவின் 3-வது பத்தியில் இறந்துபோனவரின் வயது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் அதனை நிரூபிக்க வேண்டும். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இறந்து போன நபரின்தொழில், மாத வருமானம் போன்ற விவரங்கள் சரியானவை அல்ல. எனவே அவை மறுக்கப்படுகின்றன. மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைகள் மிகவும் அதிகமானது. மனுவில் விவரிக்கப்பட்டுள்ள விபத்து நிகழ்ந்த விதம் சரியானது அல்ல. 3-வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையல் இவ்விபத்து நடைபெறவில்லை. தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் சித்திரன்கோடு - தடிக்காரன்கோணம் சாலையில் கிழக்கு ஓரத்தில் 3-வது எதிர்மனுதாரர் தனது வாகனத்தை நிறுத்தியிருந்தார். 2-வது எதிர்மனுதாரர் TN 75 A 6555 என்ற பதிவெண் கொண்ட லாரியை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிக வேகத்துடனும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, தார் சாலையிலிருந்து விலகிச் சென்று, சாலையின் மிக கிழக்கு ஓரத்தில் உள்ள மண் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த TN 74 M 7274 என்ற

பதிவெண் கொண்ட வாகனத்தின் மீது திடீரென மோதியபோது, மேற்படி லாரியும், 1–ம் எதிர்மனுதாரர் வடமேற்கில் உள்ள பொன்மனை சாலையிலிருந்து கிழக்கு நோக்கி ஓட்டி வந்த TN 75 A 0292 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனமும் நேருக்கு நேர் மோதி மேற்படி விபத்து ஏற்பட்டது. 3–வது எதிர்மனுதாரர் அனைத்துப் போக்குவரத்து விதிமுறைகளையும் முறையாகப் பின்பற்றி, தார் சாலையைக் கடந்து மண் சாலையில் தனது வாகனத்தை நிறுத்தியிருந்தார். எனவே, இந்த எதிர்மனுதாரர்கள் மேற்படி விபத்திற்கு எவ்விதத்திலும் பொறுப்பல்ல. ஆகவே, இம்மனுவில் இந்த எதிர்மனுதாரர்கள் அவசியமான தரப்பினர் அல்ல. எனவே மனுதாரர்களின் மனுவினை 3 மற்றும் 6–ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

6) <u>7–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

(i) மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மறுக்கப்படுகின்றன. ஒப்புக்கொள்ளப்பட்டவற்றை தவிர, மனுவில் கூறப்பட்டுள்ள பிற குற்றச்சாட்டுகளை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்திற்கான காப்பீடானது 'Act Policy' or 'Statutory Policy' ஆகும். மேற்படி இருசக்கர வாகனத்தில் இறந்து போன நபர் பின் இருக்கையில் பயணித்தவர் என்பதால் அவர் ஒரு இலவசப் பயணியாக மட்டுமே பயணம் செய்துள்ளார். பின் இருக்கைப் பயணியின் அபாயங்களை ஈடுகட்ட கூடுதல் பிரீமியம் எதுவும் வசூலிக்கப்படாததால், 4–வது

எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகளின்படி, பின் இருக்கைப் பயணி ஒரு இலவசப் பயணி என்பதால், மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக எந்தவொரு கோரிக்கையையும் வைக்க முடியாது. இறந்து போன நபர் தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்தது சட்ட மீறலாகும். எனவே இந்த மனு இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும். டிப்பர் லாரி மற்றும் மஹிந்திரா மேக்ஸி டிரக் வாகனங்களின் ஓட்டுநர்களின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும், அலட்சியமான ஓட்டுதலால் மட்டுமே மேற்படி விபத்தானது நடந்துள்ளது. இந்த எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து எந்தவொரு கோரிக்கை படிவத்தையும், தகவலையும் பெறவில்லை. மனுவின் அடிப்படையில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) 1988–ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 134 [C]–ன்படி, காப்பீடு செய்தவர் காப்பீட்டு பற்றிய விவரங்கள், விபத்து நடந்த தேதி, நேரம் மற்றும் இடம், காயமடைந்தவரின் விவரங்கள், ஓட்டுநரின் பெயர் மற்றும் ஓட்டுநரின் உரிம விவரங்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், காப்பீடு செய்தவர் மேற்படி விபரங்களை சமர்ப்பிக்கவில்லை. எனவே, இந்த எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் செலுத்தக் கடமைப்பட்டவர் அல்ல, மேலும் இந்த எதிர்மனுதாரருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்படத் தகுதியானது.

(iii) M.V.Act, 1988–ன் பிரிவு 158 (6)–ன் படி, தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட காவல் நிலையம் வழக்கிற்கு

சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பத் தவறிவிட்டது.

(iv) இந்த எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட பாலிசியானது விபத்து நடந்த நேரத்தில் அமலில் இருந்தது என்பதை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். இந்த எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதாகக் கூறப்படும் வாகனத்தின் ஓட்டுநர் முறையாக உரிமம் பெற்றிருந்தார் என்பதை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். விபத்து நடந்த நேரத்தில் வாகனத்தின் சரியான ஆவணங்கள் இருந்ததா, காப்பீடு விதி மீறல் எதுவும் இருந்ததா என்பதை எல்லாம் மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். முதல் தகவல் அறிக்கை, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் இடையே எந்த முரண்பாடும் இல்லை என்பதையும் மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். இறந்து போன நபரின் வயது, வருமானம், விபத்து நடந்த இடம், விபத்தின் தேதி மற்றும் நேரம் ஆகியவற்றை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். எனவே மனுதாரர்களின் மனுவினை 7–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

**7) 8–<u>ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>**

(i) குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவற்றை தவிர, மனுவில் கூறப்பட்டுள்ள அனைத்துக் கூற்றுகளும் மறுக்கப்படுகிறது. இறந்து போன சுபினின் வயது, தொழில், வேலையளித்தவர், விபத்து, அவருக்கு

ஏற்பட்ட காயங்களின் தன்மை ஆகியவற்றை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் ஓட்டுநர்கள், உரிமையாளர்கள் மற்றும் காப்பீட்டாளர்கள் ஆகியவற்றை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். மனுவில் கூறப்பட்ட இடத்தில், நேரத்தில் கூறப்பட்ட விதத்தில் விபத்து எதுவும் நடக்கவில்லை. மனுதாரர்களால் எந்த ஆவண ஆதாரமும் சமர்ப்பிக்கப்படவில்லை. மனுதாரர்கள் ஏற்கத்தக்க ஆதாரங்களைக் கொண்டு விபத்தை நிரூபிக்க வேண்டும். 2–ம் எதிர்மனுதாரரான ஓட்டுநர் விபத்திற்குச் சிறிதும் பொறுப்பல்ல. மனுதாரர்கள் 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களின் அஜாக்கிரதையாலும், கவனகுறைவாலும் விபத்து ஏற்பட்டது என்று கூறுவது தவறானதாகும். மனுதாரர்கள் விபத்து தொடர்பான விவரங்களை மறைத்துள்ளனர். 1–ம் எதிர்மனுதாரர் தலைகவசம் அணியாமல் பொன்மனை துணை சாலையிலிருந்து கவனக்குறைவாகவும் அதிவேகமாகவும் வந்து, பிரதான சாலையில் செல்லும் வாகனங்களைக் கவனிக்காமல் திடீரெனப் பிரதான சாலையைக் கடந்தபோது, லாரியின் இடது பக்க டயரில் மோதியுள்ளார். 2–ம் எதிர்மனுதாரர் லாரியை மெதுவான வேகத்தில், கவனமாக, சாலையின் இடதுபுறமாக, ஹாரன் அடித்து, போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்து ஓட்டினார். மேலும், 1–ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனம் திடீரென பிரதான சாலையைக் கடந்தபோது, 2–ம் எதிர்மனுதாரர் விபத்தைத் தவிர்ப்பதற்காக தனது லாரியை வலதுபுறம் திருப்பி, திடீரென பிரேக் போட்டபோதும் விபத்தை தவிர்க்க முடியவில்லை. மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர்

விழிப்புடன் இருந்திருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம். 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தக் கவனக்குறைவும் இல்லை. குலசேகரம் காவல்நிலைய காவல் அதிகாரிகள் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக 23.12.2020–ம் தேதி குற்ற எண் 557/2020–ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார்கள். முறையான விசாரணைக்கு பிறகு, பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் எண்,1 நீதிமன்றத்தில் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளார்கள். விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரர் மட்டுமே பொறுப்பாவார். 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் மட்டுமே விபத்து ஏற்பட்டது. எனவே 8–வது எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் செலுத்தக் கடமைப்பட்டவர் அல்ல.

(ii) மனுதாரர்கள், தாங்கள் மட்டுமே சட்டப்பூர்வ வாரிசுகள் என்பதையும், இறந்து போன சுபினை சார்ந்திருந்தார்கள் என்பதையும் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். இறந்து போன சுபின் என்பவரின் அனைத்து சட்டப்பூர்வ வாரிசுகளும் அவசியமான தரப்பினர் ஆவார்கள். மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை மிக அதிகமானது.

(iii) இறந்து போன நபரின் மாத வருமானம் ரூ.33,000/– என்பதைக் காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை. விபத்தின் விதமும் தன்மையும் கோரிக்கை மனுவில் சரியாகக் குறிப்பிடப்படவில்லை. விபத்து நடந்த நேரத்தில் இறந்து போன சுபின் தலைக்கவசம் அணியவில்லை. விபத்து சமயத்தில் இறந்து போன

நபருக்கு 31 வயதுக்கு மேல் இருக்கும். மனுதாரர்களால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட பட்டயப் படிப்பு மதிப்பெண் சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ் மற்றும் சம்பள சான்றிதழ் ஆகியவை இந்த வழக்கிற்காக போலியாக உருவாக்கப்பட்டவை ஆகும்.

(iv) KL 17 L 3744 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியானது, மூவாற்றுப்புழா, குன்னக்கல் அஞ்சல், கொட்டலில் ஹவுஸை சேர்ந்த அலெக்ஸ் பால் என்பவரின் பெயரில் 16.03.2020 முதல் 15.03.2021 வரையிலான காலத்திற்கு கேரளா மாநிலம் மூவாற்றுப்புழா நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட் கோட்ட அலுவலகத்தில் முறையாகக் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. விபத்துக்கு முன்னர், திரு. அலெக்ஸ் பால் மேற்படி KL 17 L 3744 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை 5–வது எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்துள்ளார். எனவே மேற்படி டிப்பர் லாரியானது மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 5–வது எதிர்மனுதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு TN 75 AQ 6555 என மறு எண்ணிடப்பட்டுள்ளது. காப்பீட்டுப் பத்திரத்தில் பெயர் மாற்றம் மற்றும் பதிவு எண் மாற்றம் ஆகியவையும் செய்யப்படவில்லை. விபத்து நடந்த தேதியில், காப்பீடு செய்தவரான அலெக்ஸ் பாலுக்கு KL. 17 L 3744 / TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியின் மீது காப்பீடு செய்யக்கூடிய உரிமை எதுவும் இல்லை. எனவே, அந்தக் காப்பீடு தொடக்கத்திலிருந்தே செல்லாததாகும்.

(v) TN 75 AQ 6555 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளராக கே.கே.கிரானைட்ஸ் என்பவர்

எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டார். மேலும், TN 75 AQ 6555 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளரான 5-வது எதிர்மனுதாரருக்கு 8-வது எதிர்மனுதாரரான நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட் உடன் காப்பீட்டுக்கான எந்தவித ஒப்பந்தமும் இல்லை. வாகனத்தின் உரிமை மாற்றம் குறித்து அதனைப் பெற்றுக்கொண்ட உரிமையாளரோ அல்லது மாற்றிக்கொடுத்த உரிமையாளரோ இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்திற்குத் தெரிவிக்கவில்லை. இது காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீறலாகவும், மோட்டார் வாகனச் சட்டத்தின் மீறலாகவும் உள்ளது. பதிவுச் சான்றிதழின்படி, விபத்து நடந்த தேதியில் TN 75 AQ 6555 என்ற பதிவு எண்ணைக் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளர் 5-வது எதிர்மனுதாரர் ஆவார். விபத்து நடந்த நேரத்தில், காப்பீடு செய்யப்பட்ட அலெக்ஸ் பால் TN 75 AQ 6555 என்ற பதிவு எண்ணைக் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளர் அல்ல. எனவே 8-ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் செலுத்தக் கடமைப்பட்டவர் அல்ல.

(vi) இந்த மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல, காப்பீடு செய்யப்பட்ட அலெக்ஸ் பால் என்பவர் அவசியமான தரப்பினர் ஆவார். அவசியமான தரப்பினரைத் தவறாகச் சேர்த்துள்ளதாலும், சேர்க்கத் தவறியதாலும் இந்த மனு செல்லாது. எனவே, இந்த 8-வது எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கக் கடமைப்பட்டவர் அல்ல. விபத்து நடந்த நேரத்தில், 2-ம் எதிர்மனுதாரர் லாரியை ஓட்டுவதற்கு செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்க வேண்டும். இல்லையெனில், அது

காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறலாகும். எனவே மனுதாரர்களின் மனுவினை 8–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

**8) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள்:</u>**

1 TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியின் ஓட்டுநரான 2–ம் எதிர்மனுதாரரின் கவனக் குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதா?

2 TN 74 M 7274 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநரான 3–ம் எதிர்மனுதாரரின் கவனக் குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதா?

3 TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரரின் கவனக் குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதா?

4 மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள விபத்து இழப்பீடு பெற தகுதியுள்ளவர்களா? இழப்பீட்டு தொகை எவ்வளவு?

5 இழப்பீட்டு தொகையை வழங்க கடமைப்பட்டவர் யார்?

9) மனுதாரர்கள் தரப்பில், 1–ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.ஆல்பர்ட் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில், 8–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி திருமதி.ஆனி வினோ ராஜாத்தி என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2–ம் எதிர்மனுதாரர் திரு.பாகுலியன் நாயர்

என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 7–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தின் உதவி மேலாளர் திரு.சுசீலன் ஜாண் என்பவர் எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.3 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**10) <u>பிரச்சனை 1 முதல் 3 –க்கான தீர்வு :–</u>**

மனுதாரர்கள் தரப்பு வழக்கானது, கடந்த 23.12.2020 அன்று காலை சுமார் 11.30 மணியளவில், 4–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ பேஷன் பிளஸ் இருசக்கர வாகனத்தில் இறந்து போன சுபின் என்பவரை பின் இருக்கையில் அமர வைத்து 1–வது எதிர்மனுதாரர் ஓட்டி சென்று கொண்டிருந்தபோது, 5–வது எதிர்மனுதாருக்கு சொந்தமான TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை 2–வது எதிர்மனுதாரர் கஞ்சிகுழியிலிருந்து இடுக்கன்துறைக்கு கிரானைட் கற்களை ஏற்றுவதற்காக தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி சென்று சுருளக்கோடு சந்திப்பை அடைந்தபோது, 1–வது எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தை பார்த்த 2–வது எதிர்மனுதாரர் தனது வாகனமான Tipper லாரியை வலதுபுறமாகத் திருப்பி சென்று, 3–வது எதிர்மனுதாரரால் சாலையின் வலதுபுறத்தில் நிறுத்தப்பட்டிருந்த 6–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 74 M 7274 என்ற பதிவு எண் கொண்ட Maxi Truck வாகனத்தின் மீது மோதினார் எனவும், பொன்னமணியிலிருந்து சுருளக்கோடு நோக்கி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி 1–வது எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம், 5–

வது எதிர்மனுதாரரின் டிப்பர் லாரி மீது மோதி, 1–வது எதிர்மனுதாரரும், இறந்து போன நபரும் மேற்படி வாகனத்திலிருந்து கீழே விழுந்ததில் 1–வது எதிர்மனுதாரருக்கும், இறந்து போன நபருக்கும் உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டது எனவும், இறந்து போன சுபினுக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டது எனவும், உடனடியாக இறந்து போன சுபினையும், 1–வது எதிர்மனுதாரரையும் பத்மநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று, அங்கு மனுதாரர்களின் மகன் சுபின் இறந்து போயுள்ளார் எனவும் கூறப்பட்டுள்ளது. அதை நிரூபிக்கும் வகையில், மேற்படி விபத்தில் இறந்து போன நபரின் தகப்பனார் 1–ம் மனுதாரர் சுந்தர் ராஜ் என்பவர் ம.சா.1 ஆக சாட்சியமளித்து, அவரது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து மனுவில் உள்ள சங்கதிகளை எடுத்துச் சொல்லியுள்ளார்.

**11)** மேலும், மனுதாரர்கள் தரப்பில், விபத்து குறித்த முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1, பார்வை மகஜர் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2, மாதிரி வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3, TN 74 AQ 6555, TN 74 M 7274, TN 75 A 0292 ஆகிய வாகனங்களுக்குரிய மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4, பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5, இறுதி அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6, மனுதாரர்களின் மகனின் சம்பள சான்றிதழ் அசல் ம.சா.ஆ.7, மனுதாரர்களின் மகனின் இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.8, மனுதாரர்களின் மகனின் வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.9, மனுதாரர்களின் மகனின் டிம்ளமோ மதிப்பெண் சான்றிதழ் அசல்

ம.சா.ஆ.10, மனுதாரர்களின் மகன் Diplomo Electronic Engineering படித்ததற்கான சான்றிதழ் அசல் ம.சா.ஆ.11, மனுதாரர்களின் மகனின் நன்னடத்தை சான்றிதழ் அசல் ம.சா.ஆ.12, 1–ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.13, 2–ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.14, 1–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் ம.சா.ஆ.15, 2–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் ம.சா.ஆ.16 முதலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, அவற்றின்மூலம் மனுதாரர்கள் தரப்பு வழக்கானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**12)** ம.சா.1ன் வாய்மொழி சாட்சியமானது, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் மூலம் உறுதிபடுத்தப் பட்டுள்ளது. மேலும், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலிருந்து விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரர்தான் காரணம் என்று சொல்லப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ஆனால் மனுதாரர்கள் தரப்பில் விபத்திற்கு 1 முதல் 3– எதிர்மனுதாரர்கள்தான் காரணம் என சொல்லப்படுவதாக தெரிய வருகிறது. எனவே அது சம்பந்தமாக முதலில் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

**13)** 1 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில், 4–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் 1–வது எதிர்மனுதாரர் இறந்து போன நபரை பின்னால் அமர வைத்து, அனைத்து போக்குவரத்து விதிகளையும் பின்பற்றி மெதுவாக ஓட்டி வந்தார் எனவும், TN 74 M 7274 என்ற பதிவு எண் கொண்ட மஹிந்திரா மேக்ஸி டிரக் வாகனம் சித்திரக்கோடு –

தடிக்கரங்கணம் செல்லும் சாலையில் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றாமல் நிறுத்தப்பட்டிருந்தது எனவும், TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை 2–வது எதிர்மனுதாரர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹார்ன் அடிக்காமலும் ஓட்டி வந்து எதிர் திசையில் 1–வது எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது எனவும், விபத்தானது 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை எனவும், குலசேகரம் காவல்துறையினர் 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து புகாரைப் பெற்ற போதும், மேற்படி புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யவில்லை எனவும், காவல்துறையினர் 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்து ஒரு பொய்யான புகாரைப் பெற்று, 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக குற்ற எண் 557/2020–ல் வழக்குப் பதிவு செய்ததால் 1–ம் எதிர்மனுதாரர் இது தொடர்பாக 31.12.2023 அன்று காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினார் எனவும், மேலும் பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2–ல் பிரிவு 156(3)–ன் கீழ் ஒரு மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவானது Crl.MP எண்.1054/2021 என எண்ணிடப்பட்டு, விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு குலசேகரம் காவல்துறையினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டபோதும், இந்நாள்வரை மேற்படி காவல்துறையினர் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை எனவும் கூறியிருந்தபோதிலும், அதனை நிரூபிக்கும் வகையில் 1,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆவண ஆதாரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என தெரிய வருகிறது. மேற்படி எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

**14)** மேலும் 2 மற்றும் 5–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில், 5–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை சுருளக்கோடு சந்திப்பு அருகே, 2–வது எதிர்மனுதாரர் போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்து, மெதுவாகவும் கவனமாகவும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட பேஷன் மோட்டார் சைக்கிளை எதிர் திசையிலிருந்து 1–வது எதிர்மனுதாரர் கவனகுறைவாகவும் அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளைக் கடைப்பிடிக்காமலும் ஓட்டி வந்து, கிழமேல் சாலையின் தென்பக்கத்தை நோக்கி விலகிச் சென்றார் எனவும், எனவே நேருக்கு நேர் மோதலைத் தவிர்க்கும் பொருட்டு, மேற்படி லாரியின் ஓட்டுநரான 2–ம் எதிர்மனுதாரர் சாலையோரம் நின்றிருந்த TN 74 M 7274 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மீது மோதியதைத் தொடர்ந்து, TN 75 A 0292 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் மேற்படி டிப்பர் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டது எனவும், விபத்தானது 2–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை எனவும் கூறி, அதனை நிரூபிக்கும் வகையில் மேற்படி லாரியின் ஓட்டுநரான 2–ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.2 எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளை அனுசரித்து விபத்தானது, 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாலேயே விபத்து குறித்து 1–ம் எதிர்மனுதாரர் ஜெகன்மீது முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

**15)** மேலும் 3 மற்றும் 6–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில், 3–வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இவ்விபத்து நடைபெறவில்லை எனவும், 2–வது எதிர்மனுதாரர் TN 75 A 6555 என்ற பதிவெண் கொண்ட லாரியை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிக வேகத்துடனும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, தார் சாலையிலிருந்து விலகிச் சென்று, சாலையின் மிக கிழக்கு ஓரத்தில் உள்ள மண் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தின் மீது திடீரென மோதினார் எனவும், பின்னர் மேற்படி லாரியும், TN 75 A 0292 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனமும் நேருக்கு நேர் மோதி மேற்படி விபத்து ஏற்பட்டது எனவும், 3–வது எதிர்மனுதாரர் அனைத்து போக்குவரத்து விதிமுறைகளையும் முறையாகப் பின்பற்றி, தார் சாலையைக் கடந்து மண் சாலையில் தனது வாகனத்தை நிறுத்தியிருந்தார் எனவும் கூறப்பட்டிருந்தாலும், 3, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆவண ஆதாரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என தெரிய வருகிறது. மேற்படி எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கவில்லை.

**16)** மேலும் 8–ம் எதிர்மனுதாரர் தரப்பில், மேற்படி விபத்து குறித்து குலசேகரம் காவல்நிலையத்தார் 1–ம் எதிர்மனுதாரர் மீதுதான் வழக்கு பதிவு செய்துள்ளனர் எனவும், பின்னர் புலன் விசாரணை செய்து 1–ம் எதிர்மனுதாரர் மீதுதான் பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் எண்,1 நீதிமன்றத்தில் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

**17)** ம.சா.ஆ.7 குற்ற இறுதி அறிக்கையானது 1–ம் எதிர்மனுதாரர் ஜெகன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேலும், ம.சா.ஆ.2 பார்வை மகஜரிலிருந்தும், ம.சா.ஆ.3 மாதிரி வரைபடத்திலிருந்தும் பார்க்கும்போது, சம்பவமானது தென்வடல் மெயின்ரோட்டில் சுருளக்கோடு சந்திப்பில் நடுரோட்டில் நடந்துள்ளது என தெரிய வருகிறது. வழக்கு விபத்தில் மூன்று வாகனங்கள் சம்பந்தப்பட்டதாக காண்பிக்கப்பட்டாலும், 3–ம் எதிர்மனுதாரர் 6–ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட டிரக்கை தென்வடல் ரோட்டின் கிழக்கு ஓரமாகதான் நிறுத்தி வைத்துள்ளதாக தெரிய வருவதால் மேற்படி டிரக்கானது இந்த விபத்தில் நேரடியாக சம்பந்தப்படவில்லை என அடிப்படையிலேயே அறிந்து கொள்ள முடிகிறது. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி டிப்பர் லாரியை ஓட்டி வந்த 2–ம் எதிர்மனுதாரர்தான் விபத்தை தவிர்க்க லாரியை திடீரென வலது பக்கம் திருப்பியபோது ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த டிரக்கின் மீது மோதியுள்ளது என தெரிய வருவதால் TN 74 M 7274 என்ற பதிவு எண் கொண்ட டிரக் வாகனத்தின் ஓட்டுநரான 3–ம் எதிர்மனுதாரரின் கவனக் குறைவால் விபத்து ஏற்படவில்லை என முதல்நோக்கிலேயே இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**18)** இந்த வழக்கு விபத்தில் 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனமும், 2–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த டிப்பர் லாரியும் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளது என தெரிய வருகிறது. ஆனால் 1–ம் எதிர்மனுதாரர் மீதுதான் குற்ற வழக்கு பதியப்பட்டு குற்ற இறுதி

அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. விபத்திற்கு 2-ம் எதிர்மனுதாரர்தான் காரணம் என 1,4,7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்திருந்தாலும், 1-வது எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க தவறியுள்ளதால் அவரது ஆட்சேபணையை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாது என இத்தீர்ப்பாயம் தெளிவுபடுத்துகிறது. அதேசமயம் விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர்தான் காரணம் என குற்றம்சாட்டி 2,5,8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்துள்ளதை நிரூபிக்கும் பொருட்டு 2-ம் எதிர்மனுதாரரான டிப்பர் லாரியின் ஓட்டுநர் பாகுலியன் நாயர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் அவர் தென்வடல் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சுருளக்கோடு மூன்று முக்கு சந்திப்பு அருகே டிப்பர் லாரியை மெதுவாக, கவனமாக, இடதுபுறமாக ஓட்டி வந்தபோது பொன்மனை சாலையிலிருந்து மூன்று முக்கு சந்திப்பை நோக்கி 1-ம் எதிர்மனுதாரர் அவரது இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளைப் பின்பற்றாமலும் ஓட்டி வந்து பிரதான சாலையில் வரும் வாகனங்களை கவனிக்காமல் திடீரென குறுக்கே வந்ததால் அந்த வாகனத்தை இடிக்காமல் தவிர்ப்பதற்காக தனது லாரியை வலது பக்கம் திருப்பி நிறுத்தியபோது அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குட்டியானை வாகனத்தில் லாரி மோதியது எனவும், லாரியின் இடதுபுற பின் சக்கரம் மீது 1-ம் எதிர்மனுதாரர் அவரது இருசக்கர வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் எனவும் கூறியுள்ளதாக தெரிய வருகிறது. அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் அவர் ஓட்டி வந்த லாரியை

வலதுபக்கமாக திருப்பியதால்தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேக்ஸி கேப் வாகனத்தின் மீது மோதியதாக ஒப்புக்கொண்டுள்ளார். எனவே 1–ம் எதிர்மனுதாரரும் அவரது இருசக்கர வாகனத்தை கவனகுறைவாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்துள்ளார் எனவும், 2–ம் எதிர்மனுதாரரும் அவரது டிப்பர் லாரியை அதிவேகமாகவும், கவன குறைவாகவும் ஓட்டி வந்துள்ளார் எனவும் அறிந்து கொள்ள முடிகிறது. 1–ம் எதிர்மனுதாரர் பிராதான சாலையில் வரும் வாகனங்களை கவனிக்காமல் மூன்று முக்கு சந்திப்பில் வேகமாக ரோட்டின் குறுக்கே வந்ததுதான் விபத்திற்கு முதல் காரணம் எனவும், பிரதான சாலையில் டிப்பர் லாரியை ஓட்டி வந்த 2–வது எதிர்மனுதாரர் மூன்று முக்கு சந்திப்பில் கவனமாக ஓட்டி வந்து அணுகு சாலையிலிருந்து வாகனங்கள் வருகிறதா என்பதைக் கவனித்து நிதானமாக ஓட்ட தவறியதால்தான் அவராலும் விபத்தை தவிர்க்க முடியவில்லை என்பதால் அவரும் 2–வதாக காரணம் எனவும் இத்தீர்ப்பாயம் காண்கிறது. 2–ம் எதிர்மனுதாரர் அதிவேகமாக வந்ததால்தான் அவரால் பிரேக் பிடிக்க இயலாமல் கட்டுப்பாட்டை இழந்து வலதுபுறமாக திரும்பி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேக்ஸி கேப் வாகனத்தின் மீது லாரியை மோதியுள்ளார் என்பதால் அவரும் விபத்திற்கு ஒரு காரணம் என தெரிய வருகிறது. தென்வடல் பிரதான சாலையில் இருசக்கர வாகனத்தை 1–ம் எதிர்மனுதாரர் வேகமாக குறுக்காக ரோட்டின் நடுப்பகுதியில் கொண்டு வந்ததால் அவர்தான் விபத்திற்கு பிரதான காரணம் எனவும், மூன்று முக்கு சந்திப்பில் வாகனங்கள் வர வாய்ப்புள்ளது என்பதை உணர்ந்து கவனமாக லாரியை ஓட்டாமல் கவனகுறைவாக 2–ம் எதிர்மனுதாரர் டிப்பர் லாரியை ஓட்டி

வந்ததால் அவரது கட்டுப்பாட்டை மீறி விபத்து நடந்துள்ளதற்கு 2–ம் எதிர்மனுதாரரும் ஒரு காரணம் எனவும் இத்தீர்ப்பாயம் தெளிவுப்படுத்துகிறது. எனவே 1, 2ம் எதிர்மனுதாரர்கள்தான் இந்த விபத்திற்கு காரணம் எனவும் அறிந்து கொள்ள முடிகிறது. 1,2 –ம் எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு எதிரே வரும் வாகனங்களைப் பார்த்து கவனமாக வாகனத்தை ஓட்டியிருக்கும் பட்சத்தில் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என இத்தீர்ப்பாயம் காண்கிறது. எனவே, மேற்படி விபத்து 1,2 –ம் எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவால்தான் நடைபெற்றுள்ளதாக தெரியவருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், 4–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதால் அவர்தான் விபத்திற்கு பிரதான காரணம் எனவும், 5–வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியின் ஓட்டுநரான 2–ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி விபத்து ஏற்படுவதற்கு ஒரு காரணமாக இருந்துள்ளதால் அவரும் விபத்திற்கு ஒரு காரணம் எனவும், இந்த தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. இவ்வாறு பிரச்சனை 1 முதல் 3–ற்கு தீர்வு காணப்படுகிறது.

**19) <u>பிரச்சனை 4–க்கான தீர்வு:–</u>**

மேலே நாம் விரிவாக விவாதித்தவாறு, மேற்படி விபத்தானது 1, 2–ம் எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவால் நடந்துள்ளதாக தீர்வு

கண்டுள்ளதன் அடிப்படையில், மேற்படி விபத்திற்கான இழப்பீட்டை பெற மனுதாரர்கள் தகுதியுடையவர்கள் என இந்த தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. இழப்பீட்டு தொகை எவ்வளவு என்பதை பொறுத்தவரை, மேற்படி விபத்து நடந்த 2020–ம் வருடம் இறந்த நபரின் வயது 29 என்றும், விபத்திற்கு முன்பு மேற்படி நபர் ஆரோக்கியமாக இருந்து 'AJ Construction' நிறுவனத்தில் மின்பணியாளராகப் பணியாற்றி நாளொன்றுக்கு ரூ.1,100/– என்ற அளவில் தினக்கூலி பெற்றார் எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. இறந்துபோன சுபினின் வருமானத்தை நிரூபிப்பதற்கு அவர் பணிபுரிந்த நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ஆல்பர்ட் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேலும் மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன சுபினின் சம்பள சான்றிதழ் ம.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் அடிப்படையில் மட்டும் இறந்துபோன சுபின் மின்பணியாளராகப் பணியாற்றி நாளொன்றுக்கு ரூ.1,100/– என்ற அளவில் தினக்கூலி பெற்று வந்தார் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில் இறந்து போன சுபின் ம.சா.2 அலுவலகத்தில் வேலை பார்த்து சம்பளம் பெற்றார் என்பதற்கான லெட்ஜர் முதலான சம்பள பதிவேடுகள், வருகை பதிவேடுகள், ரசீது எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், அவர் தினக்கூலி என்பதால் அவரது பெயர் தொழிலாளர் அலுவலகத்தில் கொடுக்கப்படவில்லை மற்றும் அவர் சம்பளம் பெற்றதற்கான ஆவணங்கள் கிடையாது என ம.சா.2 ஒப்புக்கொண்டுள்ளதாலும், மேற்படியாரின் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.7

சம்பள சான்றிதழின் அடிப்படையில் முடிவு எடுக்க இயலாது என இத்தீர்ப்பாயம் தெளிவுபடுத்துகிறது.

**20)** மேலும், மனுதாரர்கள் தரப்பில் இறந்து போனவரின் வயதை நிரூபிக்க ம.சா.ஆ.5 பிரேத பரிசோதனை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் இறந்துபோன சுபினின் வயதை நிர்ணயம் செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ம.சா.ஆ.5 சான்றிதழில் இறந்துபோன சுபினின் வயது 29 என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆவணத்தின் அடிப்படையில், விபத்து தேதியில் இறந்துபோனவரின் வயதை **29** வயதாக கணக்கீட்டிற்கு இந்த தீர்ப்பாயம் எடுத்துக்கொள்கிறது. மனுதாரர்கள் தரப்பில், இறந்துபோன சுபின் Electrical பாடப்பிரிவில் Diploma படிப்பு படித்துள்ளதாக மனுவில் குறிப்பிட்டு, ம.சா.ஆ.10 இறந்துபோன சுபினின் டிம்ளமோ மதிப்பெண் சான்றிதழ் அசல், ம.சா.ஆ.11 இறந்துபோன சுபின் Diplomo Electronic Engineering படித்ததற்கான சான்றிதழ் அசல், ம.சா.ஆ.12 இறந்துபோன சுபினின் நன்னடத்தை சான்றிதழ் அசல் ஆகிய சான்றிதழ்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் இறந்துபோனவரின் வருமானத்தை காட்ட முறையான ஆவணம் இல்லை. எனினும், மாண்புமிகு 2019(1) TNMAC 54 (DB) என்ற ஆண்டாள் வழக்கு முன்தீர்ப்புரையின் அடிப்படையில் பார்க்கும்போது, 2020 – 2021 வருட cost of inflation index அடிப்படையில், Electrician ஆக வேலை செய்யும் நபர் ஒருவர் மாதம் **ரூ.15,166/-** வருமானம் உடையவர் என முடிவு செய்ய முடியும். எனவே, இறந்துபோன நபர் Electrician ஆக தினக்கூலியாக வேலை செய்து வந்துள்ளார் என்று

கருதி, 2020-ம் வருடத்தில் அவர் வசித்துள்ள பகுதியில் இருக்கக்கூடிய cost of living மற்றும் வாழ்க்கைத் தரம் மற்றும் வேலை ஆகியவற்றின் அடிப்படையிலும், இறந்துபோன நபரின் வயதை கருத்தில் கொண்டும், அவருடைய மாத வருமானமானது மாதம் **ரூ.15,166/-** என இந்த தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது. மாண்புமிகு Sarala Varma case **மற்றும்** Pranoy Sethi case **ஆகிய முன் தீர்ப்புரைகளின் அடிப்படையில்** Multiplier method மூலம் விபத்தில் இறந்த நபரின் வருமான இழப்பை கணக்கீடு செய்யலாம் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. இறந்த நபரின் மாத வருமானம் **ரூ.15,166/-** எனவும், 2016(2) TNMAC 640 என்ற முன்தீர்ப்புரை மற்றும் மாண்புமிகு Pranoy Sethi case ஆகிய முன் தீர்ப்புரைகளின் அடிப்படையில் Future prospects **40% என**வும், Multiplier **17** எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்து, விபத்து தேதியில் இறந்துபோன நபர் திருமணமாகாத நபராக இருந்துள்ள நிலையில், இறந்த நபரின் வருமானத்திலிருந்து **1/2** பகுதி இறந்த நபரின் சொந்த செலவிற்காக (Deduction for personal and living expenses) கழிக்கப்படவேண்டும் எனவும் மேற்படி முன்தீர்ப்புரைகளின் அடிப்படையில் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்து வருமான இழப்பை கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்கிறது.

**ரூ.15,166/- + (ரூ.15,166/- x 40% = 6,066/-) = ரூ.21,232/-**

**ரூ.21,232/- - (1/2 x ரூ.21,232/- = 10,616/-) = ரூ.10,616/-**

**எனவே, ரூ.10,616/- x 12 x 17 = ரூ.21,65,664/-.**

**21)** மேற்கண்ட கணக்கீட்டின் அடிப்படையில், மேற்படி விபத்தில் இறந்த நபரால் ஏற்பட்ட வருமான இழப்பு **ரூ.21,65,664/-** என இந்த

தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது. 1,2 மனுதாரர்கள் தங்களது இளவயது மகனை இழந்துவிட்டதால், 2016(2) TNMAC 640 என்ற முன்தீர்ப்புரையின் அடிப்படையில் பாச இழப்பீடாக **தலா ரூ.50,000/- (2 x 50,000 = ரூ.1,00,000/-)** வழங்கப்படுகிறது. Loss of estate என்ற தலைப்பின் கீழ் **ரூ.18,000/-**மும், ஈமச்சடங்கிற்காக **ரூ.18,000/-**மும், Loss of consortium என்ற தலைப்பின் கீழ் தலா **ரூ.48,000/- (2 x 48,000 = ரூ.96,000/-)**மும் மேற்கண்ட மாண்புமிகு Pranoy Sethi தீர்ப்புரையின் அடிப்படையிலும், அதன் பிறகு வந்த மாண்புமிகு 2023(1) TNMAC 1 (SC) என்ற அஞ்சலி வழக்கின் அடிப்படையிலும் மனுதாரருக்கு வழங்கப்படுகிறது. ஆடைகள் மற்றும் பொருள் சேதத்திற்காக **ரூ.1,000/-** அனுமதிக்கப்படுகிறது.

**22)** எனவே, மனுதாரர்களுக்கு கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் இழப்பீடு வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| விபத்தில் இறந்த நபரால் ஏற்பட்ட வருமான இழப்பீடாக<br>(Loss of dependency and future prospects) | ரூ.21,65,664/- |
| Loss of estate | ரூ.18,000/- |
| ஈமச் சடங்கிற்காக | ரூ.18,000/- |
| Loss of consortium (2 x 48,000 ) | ரூ.96,000/- |
| பாச இழப்பீடாக (2 x 50,000) | ரூ.1,00,000/- |
| ஆடைகள் மற்றும் பொருள் சேதத்திற்காக | ரூ.1,000/- |
| **மொத்தம்** | **ரூ.23,98,664/-** |

**23)** எனவே, மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரர்கள் **ரூ.23,98,664/-** விபத்து இழப்பீடாக பெற தகுதியுள்ளவர்கள் என இந்த தீர்ப்பாயம் பிரச்சினை 4-ற்கு தீர்வு காண்கிறது.

**24)** **பிரச்சனை. 5-க்கான தீர்வு:-**

மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை யார் கொடுக்க வேண்டும் என்பதைப் பொறுத்தவரை, ஏற்கனவே பிரச்சினை 1 முதல் 3-ல், 1,2-ம் எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டதாக விடை காணப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில், விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளர் 4-ம் எதிர்மனுதாரர் எனவும், விபத்து சமயத்தில் 2-ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளர் 5-ம் எதிர்மனுதாரர் எனவும் குறிப்பிட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரியவருகிறது. மேற்படி 4-ம் எதிர்மனுதாரரின் வாகனம் 7-ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, விபத்தின்போது காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்துள்ளது. 7-ம் எதிர்மனுதாரர் தரப்பில், விபத்து சமயத்தில் 4-ம் எதிர்மனுதாரரின் TN 75 A 0292 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்திற்கான காப்பீடானது 'Act Policy' or 'Statutory Policy' எனவும், மேற்படி இருசக்கர வாகனத்தில் இறந்து போன நபர் பின் இருக்கையில் பயணித்தவர் என்பதால் அவர் ஒரு இலவசப் பயணியாக மட்டுமே பயணம் செய்துள்ளார் எனவும் பின் இருக்கைப் பயணியின் அபாயங்களை ஈடுகட்ட கூடுதல் பிரீமியம் எதுவும் வசூலிக்கப்படாததால், 4-வது எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட காப்பீட்டுக் கொள்கையின்

விதிமுறைகளின்படி, பின் இருக்கைப் பயணி ஒரு இலவசப் பயணி என்பதால், மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக எந்தவொரு கோரிக்கையையும் வைக்க முடியாது எனவும் கூறப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. ஆனால் 7–வது எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட 7–ம் எதிர்மனுதாரர் நிறுவன உதவி மேலாளரான எ.ம.சா.3 சுசீலன் ஜாண் அவரது குறுக்கு விசாரணையின்போது, இருசக்கர வாகனத்திற்கான எ.ம.சா.ஆ.3 பாலிசி விபத்தின்போது நிலுவையில்தான் இருந்தது எனவும், இறந்துபோனவர் வாகனத்தின் உரிமையாளரோ, ஓட்டுநரோ கிடையாது எனவும், விபத்திற்கு காரணம் ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர்தான் என தங்களது உள்விசாரணை அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே இறந்துபோன சுபின் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்து சென்றுள்ளபோதும், அவர் 7–வது எதிர்மனுதாரரைப் பொறுத்த வரையில் 3–ம் நபர்தான் எனவும், அவருக்கும் காப்பீடு நிறுவனத்திற்கும் எந்தவித ஒப்பந்தமும் கிடையாது எனவும், எனவே 3–ம் நபரான இறந்து போன சுபினுக்கான இழப்பீட்டு தொகையை 7–வது எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் எனவும் இத்தீர்ப்பாயம் தெளிவுப்படுத்துகிறது.

**25)** மேலும் மேற்படி 5–ம் எதிர்மனுதாரரின் வாகனம் 8–ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, விபத்தின்போது காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்துள்ளது. 5–ம் எதிர்மனுதாரரின் வாகனம் 8–ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும், விபத்தின்போது காப்பீடு

ஊர்ஜிதத்தில் இருந்துள்ள நிலையிலும், மனுதாரர்கள் 8–ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தை பொறுத்து 3–ம் நபர்கள் என்ற நிலையிலும், காப்பீடு நிறுவனமான 8–ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு தொகையை வழங்கவேண்டும் என தெரியவருகிறது. 8–ம் எதிர்மனுதாரர் தரப்பில், KL 17 L 3744 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியானது, மூவாற்றுப்புழா, குன்னக்கல் அஞ்சல், கொட்டலில் ஹவுஸை சேர்ந்த அலெக்ஸ் பால் என்பவரின் பெயரில் 16.03.2020 முதல் 15.03.2021 வரையிலான காலத்திற்கு கேரளா மாநிலம் மூவாற்றுப்புழா நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட் கோட்ட அலுவலகத்தில் முறையாகக் காப்பீடு செய்யப்பட்டிருந்தது எனவும், விபத்துக்கு முன்னர், திரு. அலெக்ஸ் பால் மேற்படி KL 17 L 3744 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை 5–வது எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்துள்ளார் எனவும், எனவே மேற்படி டிப்பர் லாரியானது மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 5–வது எதிர்மனுதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு TN 75 AQ 6555 என மறு எண்ணிடப்பட்டுள்ளது எனவும், காப்பீட்டுப் பத்திரத்தில் பெயர் மாற்றம் மற்றும் பதிவு எண் மாற்றம் ஆகியவையும் செய்யப்படவில்லை எனவும், விபத்து நடந்த தேதியில், காப்பீடு செய்தவரான அலெக்ஸ் பாலுக்கு KL. 17 L 3744 / TN 75 AQ 6555 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியின் மீது காப்பீடு செய்யக்கூடிய உரிமை எதுவும் இல்லை எனவும், TN 75 AQ 6555 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளராக கே.கே.கிரானைட்ஸ் என்பவர் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டார் எனவும், மேலும், TN 75 AQ 6555 என்ற பதிவெண்

கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளரான 5-வது எதிர்மனுதாரருக்கு 8-வது எதிர்மனுதாரரான நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட் உடன் காப்பீட்டுக்கான எந்தவித ஒப்பந்தமும் இல்லை எனவும், வாகனத்தின் உரிமை மாற்றம் குறித்து அதனைப் பெற்றுக்கொண்ட உரிமையாளரோ அல்லது மாற்றிக்கொடுத்த உரிமையாளரோ இந்த 8-வது எதிர்மனுதாரர் நிறுவனத்திற்குத் தெரிவிக்கவில்லை எனவும், இது காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீறலாகவும், மோட்டார் வாகனச் சட்டத்தின் மீறலாகவும் உள்ளது எனவும் கூறப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. எனவே 8-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியான ஆனி வினோ ராஜாத்தி எ.ம.சா.1 ஆக சாட்சியமளித்து அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 5-ம் எதிர்மனுதாரர் வாகனமான டிப்பர் லாரிக்கு தங்களது நிறுவனத்தில் காப்பீடு விபத்தின்போது நிலுவையில் உள்ளது எனவும், மேற்படி லாரியின் பதிவெண் மாறியபோதும் அதன் இன்ஜின் ஒன்றுதான் எனவும் ஒப்புக்கொண்டுள்ளார். 5-ம் எதிர்மனுதாரர் அலெக்ஸ் பால் என்பவர் கே.கே.கிரானைட்ஸ் உரிமையாளராக காண்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. எனவே 8-ம் எதிர்மனுதாரரின் ஆட்சேபணையானது அவசியமற்றது எனவும், 5-ம் எதிர்மனுதாரருக்காக 8-ம் எதிர்மனுதாரர்தான் இறந்துபோன நபருக்கான இழப்பீட்டு தொகையை தர கடமைப்பட்டவர் எனவும் இத்தீர்ப்பாயம் தெளிவுப்படுத்துகிறது. 8-ம் எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள மேற்படி சங்கதிகள் பெயரளவில் உள்ளதாக இத்தீர்ப்பாயம் கருதி, 8-ம் எதிர்மனுதாரர் தரப்பு மேற்படி ஆட்சேபணைகளை நிராகரிக்கிறது. ஷை

சூழ்நிலையில், 4–ம் எதிர்மனுதாரருடைய வாகனத்தின் காப்பீட்டுதாரர் என்ற நிலையில், இந்த விபத்தினால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டு தொகையை 7–ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்க வேண்டுமெனவும், 5–ம் எதிர்மனுதாரருடைய வாகனத்தின் காப்பீட்டுதாரர் என்ற நிலையில், இந்த விபத்தினால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டு தொகையை 8–ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்க வேண்டுமெனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்து, இவ்வாறாக பிரச்சனை 5–ற்கு தீர்வு காணப்படுகிறது.

**26)** இழப்பீடு செலுத்த வேண்டிய சதவிகிதத்தைப் பொறுத்தவரை, விபத்திற்கு 1–வது எதிர்மனுதாரர்தான் பிரதான காரணம் என்பதால் இழப்பீட்டு தொகையில் 60%–ஐ 7–வது எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமெனவும், விபத்திற்கு 2–வது எதிர்மனுதாரரும் ஒரு காரணம் என்பதால் இழப்பீட்டு தொகையில் 40%–ஐ 8–வது எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமெனவும் இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

**27)** இறுதியாக,

(i) இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு விபத்து இழப்பீடாக **ரூ.23,98,664/–ஐ (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு)–ஐ** 7–வது (60%) மற்றும் 8–வது (40%) எதிர்மனுதாரர்கள் இம்மனு தாக்கல் செய்த தேதியான 05.03.2022 தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் வரை 7.5% p.a வட்டி மற்றும் மொத்த செலவுத் தொகை **ரூ.54,646/–** (வழக்கறிஞர் கட்டணம் **ரூ.30,987/–** + நீதிமன்ற கட்டணம் **ரூ.23,359/–** + இதர

செலவுத்தொகை **ரூ.300/-)**-ஐ இத்தீர்ப்பாயத்தின் இந்தியன் வங்கி, நாகர்கோவில் Virtual No.VMACT8MCOP1062022, IFSC Code No.IDIB000N006, MICR Code No. 629019006 என்ற வங்கி கணக்கில் நேரடியாக NEFT/RTGS மூலம் 2 மாதங்களுக்குள் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும்,

(ii) 1 மற்றும் 2 மனுதாரர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகை சம்பந்தமாக வழக்கின் சூழ்நிலை கருதியும், இறந்துபோன நபரை எவ்வாறு அவர்கள் சார்ந்திருந்தார்கள் என்பதை கருத்தில் கொண்டும், 1ம் 2-ம் மனுதாரர்களுக்கு சரிசமமாக ஆளுக்கு சரி பாதித் தொகை ஒதுக்கியும்,

(iii) ஷை மொத்த இழப்பீடு தொகை வைப்பீடு செய்த பின்பு, மனுதாரர்கள் தனியாக மனு தாக்கல் செய்து வழக்கறிஞர் கட்டணம் **ரூ.30,987/-** நீங்கலாக அவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகையை NEFT or RTGS மூலம் மனுதாரர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

(iv) மனுதாரர்கள் ஏற்கனவே செலுத்திய ரூ.20/- போக மீதி நீதிமன்றக் கட்டணம் **ரூ.23,339/-**ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

(iv) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு வழக்கு எண்.Tr.Cmp 264 to 281 of 2020 M/s. Cholamandalam M/s. General Insurance Company Ltd., Vs. Mr. Ayyanar and others-ல் 11.05.2020 அன்று பிறப்பித்த உத்தரவுப்படி உத்தரவாணையின் விவரங்கள் அனைத்தும்

இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே, தனியாக உத்தரவாணை பிறப்பிக்கப்படாது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 04–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2026.06.04 17:01:07 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்/
தலைமை நீதித்துறை நடுவர்,
நாகர்கோவில்

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–**

| ம.சா | மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளின் விவரங்கள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| ம.சா.1 | திரு.சுந்தர்ராஜ் | 1–ம் மனுதாரர் | 21.10.2024 | 25.11.2024<br>16.12.2024<br>28.04.2025 |
| ம.சா.2 | திரு.ஆல்பர்ட் | இறந்து போன நபர் பணிபுரிந்த நிறுவனத்தின் உரிமையாளர் | 02.06.2025 | 11.08.2025 |

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| ஆவண வரிசை | மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.2 | பார்வை மகஜர் நீதிமன்ற சான்றிட்ட நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.3 | மாதிரி வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.4 | TN 74 AQ 6555, TN 74 M 7274, TN 75 A 0292 ஆகிய வாகனங்களுக்குரிய மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.6 | இறுதி அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.7 | மனுதாரர்களின் மகனின் சம்பள சான்றிதழ் அசல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.8 | மனுதாரர்களின் மகனின் இறப்பு சான்றிதழ் நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.9 | மனுதாரர்களின் மகனின் வாரிசு சான்றிதழ் நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.10 | மனுதாரர்களின் மகனின் டிம்ளமோ மதிப்பெண் சான்றிதழ் அசல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.11 | மனுதாரர்களின் மகன் Diplomo Electronic Engineering படித்ததற்கான சான்றிதழ் அசல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.12 | மனுதாரர்களின் மகனின் நன்னடத்தை சான்றிதழ் அசல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.13 | 1–ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.14 | 2–ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.15 | 1–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |
| ம.சா.ஆ.16 | 2–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் | 1–ம் மனுதாரர் மூலமாக |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> :–

| எ.ம.சா | எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளின் விவரங்கள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| எ.ம.சா.1 | திருமதி.ஆனி வினோ ராஜாத்தி | 8–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி | 13.10.2025 | 03.11.2025<br>01.12.2025 |
| எ.ம.சா.2 | திரு.பாகுலியன் நாயர் | 2–ம் எதிர்மனுதாரர் | 09.03.2026 | 23.03.2026 |
| எ.ம.சா.3 | திரு.சுசீலன் ஜாண் | 7–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தின் உதவி மேலாளர் | 06.04.2026 | 06.04.2026 |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> :—

| ஆவண வரிசை | எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | KL 17 L 3744 பதிவெண் கொண்ட டிப்பர் லாரிக்கு 16.03.2020 முதல் 15.03.2021 வரையிலான காலக்கட்டத்திற்கான பாலிசி நகல் | 1—ம் எதிர்மனுதாரர் மூலமாக |
| எ.ம.சா.ஆ.2 | விபத்து குறித்து விசாரணையாளர் விசாரணை செய்து வழங்கிய விசாரணை அறிக்கை | 1—ம் எதிர்மனுதாரர் மூலமாக |
| எ.ம.சா.ஆ.3 | TN 75 A 0292 வாகனத்திற்கான காப்பீட்டு பாலிசி மற்றும் நிபந்தனைகள் | 3—ம் எதிர்மனுதாரர் மூலமாக |

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :— இல்லை

J SELVAN JESU RAJA

Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2026.06.04 17:01:18 +0530

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்/**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**நாகர்கோவில்.**